IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

**OS.No. 97/2013**

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

| NAME | Venkatesan |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.09.2023

**5 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1.இந்த வழக்கில் நான் வாதி. நான் மத்திய அரசு Food Corporation of India துறையில் சென்னையில் மேலாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் 1976 ல் பணியில் சேர்ந்தேன். சென்னை, தூத்துக்குடி, கோயம்பத்தூர், பெங்களுரில் ஆகிய இடங்களில் எனது பணிக்காலங்களில் பணி செய்தேன். எனது நிரந்தர விலாசம் தாவாப்படி சென்னையில் உள்ள விலாசம் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் பெயரியதம்பி. தாயார் பெயர் லட்சுமி அம்மாள்.

2.எனது தகப்பனார் 08.12.1987 ல் இறந்து விட்டாரர். என்றால் சரிதான். எனது தாயார் இறந்து விட்டார். வா.சா.ஆ.4 ஆவணம் எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 படி எனது தாயார் 15.10.2010 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது தாயாருக்கு இறந்து போன முதல் பிரதிவாதி ஆறுமுகம், 2 வது பிரதிவாதி ரத்தினம், இறந்த போன 4 வது பிரதிவாதி சுந்தர்ராஜன் மற்றும் நான் ஆகியோர்கள் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். மேலும் ஒரு மகள் காந்தம்மாள் அவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி ஆறுமுகம் வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்து விட்டார் என்றால் சரிதான். 1 வது பிரதிவாதி ஆறுமுகத்தின் மனைவி தான் 14 வது பிரதிவாதி கண்ணம்மாள் என்றால் சரிதான்.

3.5 முதல் 10 பிரதிவாதிகள் 1 வது பிரதிவாதி ஆறுமுகத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது சகோதரி காந்தம்மாள் கணவர் பெயர் பெருமாள். அவரிகள் மகன் பெயர் கங்கைய்யன். அவர்கள் இருவர்கள் தான் காந்தம்மாள் வாரிசுகள் என்றாலும் அவருக்கு பெண்பிள்ளைகள் இல்லை என்றால் சரிதான். காந்தம்மாளின் மகன் தான் 3 வது பிரதிவாதி கங்கைய்யன் என்றால் சரிதான். காந்தம்மாளின் கணவர் பெருமாள் 4 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார்.

4.நான் இந்த வழக்கை 2013 ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அப்பொழுது பெருமாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அப்பொழுது வழக்கில் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 11, 12, 13 மற்றும் 15 பிரதிவாதிகள் இறந்து போன 4 வது பிரதிவாதி சுந்தர்ராஜனின் வாரிசுகள் என்றால் சரிதான்.

5.நான் பாகப்பிரிவனை கேட்டு 3 இன சொத்தக்களுக்காக வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்து போன லட்சுமி அம்மாள் முக்குன்றத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி ஆறுமுகம் மூத்த மகன் என்றால் சரிதான். அவருடன் தான் எனது தாயார் லட்சுமதி அம்மாள் வசித்து வந்தார் என்றால் சரிதான்.

6. 3 இன சொத்துக்களில் முதல் சொத்து அக்ரகாரம் கிராமத்தில் உள்ள விவசாய நிலம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அக்ரகாரம் கிராமத்தில் உள்ள "எ" அட்டவணை சொத்தின் சம்பந்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் நான் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் எனது தாயார் லட்சுமி அம்மாள் 5 வது பிரதிவாதி விஸ்வநாதனுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரிதான். அதை நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனுடைய உண்மைந கல் தான் என்னிடம் காட்டப்படும் பத்திரம் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.3 ஆக வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

8.பி.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் தான் "எ" அட்டவணை சொத்துக்களில் குறிப்பிட்டுள்ள அக்ரகாரத்தில் உள்ள விவசாய நிலங்கள் என்றால் சரிதான். "பி" அட்டவணை சொத்து வீடு என்றால் சரிதான். அந்த வீட்டில் தற்போது எனளது அண்ணன் ஆறுமுகத்தின் பிள்ளைகள் குடியிருந்து வருகின்றனர். "சி" அட்டவணை சொத்து முக்குன்றம் கிராமத்தில் உள்ள விவசாய நிலம் என்றால் சரிதான்.

9.பி.சா.ஆ.3 எனது தாயார் லட்சுமி அம்மாள் எழுதி கொடுத்த தான செட்டில் மென்ட் பத்திரத்தை பற்றி எனக்கு 2013 ல் தெரியவந்தது. "எ" அட்டவணை சொத்துக்குறிய பட்டா, சிட்டா, அடங்கல் அனைத்தும் 5 வது பிரதிவாதி விஸ்வநாதன் பெயரில் தான் வருகிறது என்றால் சரிதான். அந்த பட்டா, சிட்டா, அடங்கள் கொடுத்தது தவறு என்றும் பி.சா.ஆ.3 ஆன தான செட்டில்மென்ட் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று எந்த பரிகாரமும் நான் தாவாவில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ளேன்.

10.வா.சா.ஆ.3 பத்திரத்தின் நகல் நான் தான் வாங்கினேன் என்றால் சரிதான். 2013 ல் தான் தான செட்டில்மென்ட் பத்திரம் பற்றி தெரியவந்தது என்று சொல்வது பொய் என்றாலும் அதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 5 வது பிரதிவாதி விஸ்வநாதன் 2013 வரை தான செட்டில் மென்ட் பத்திரம் பற்றி ரகசியமாக வைத்திருந்தார் என்றாலும் ஊர் காரரர்கள் சொல்லி தான் எனக்கு 2013 ம் வருடம் தெரியவந்தது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11.தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதிய தேதி அன்றே எனக்கு தெரியவந்தது என்றாலும் நான் இவ்வழக்கிற்காக 2013 ஆம் ஆண்டு தான் எனக்கு தெரியவந்தது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் 2013 ஆம் ஆண்டு தான்

தெரியவந்தது என்று சொல்கிறார்.

12.வா.சா.ஆ.3 பி.வெங்கடேசன், சென்னை என்று முதல் தாளில் குறிப்பிட்டுள்ளது நான் தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 நகலை 23.09.2011 ல் குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் 2011 ல் வாங்கி இருந்தாலும் 2013 ல் தான் வழக்கு தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.3 ஐ 2011 ல் வாங்கிவிட்டு 2013 ல் தான் எனக்கு தான தான செட்டில்மென்ட் பற்றி தெரியவந்தது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

13.வா.சா.அ.3 தான செட்டில்மென்டட் பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும். குட்டியப்பனின் மகன் பிரகாசம் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். பிரகாசம் என்பவரை எனக்கு தெரியாது. மற்றொரு சாட்சி கோபல் என்பவர் கையெழுத்து செய்துள்ளார் அவர் தற்போது இறந்து விட்டார் என்றால் அதைப்பற்றி தெரியாது. லட்சுமி அம்மாள் தான செட்டில்மென்ட் எழுதி வைத்த விவரத்தை ஊரில் உள்ள எனது உறவினர் ராஜேந்திரன், சுகன், பாபு ஆகியோர்கள் சொன்னார்கள்.

14.சுகன் மற்றும் பாபு எனக்கு உறவினர்கள். ராஜேந்திரன், சுகன், பாபு ஆகியோர்கள் முக்குன்றத்தில் வசித்து வருகின்றனர். பி.சா.,ஆ.3 06.05.2010 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ,3 எழுதப்பட்ட தேதியில் இருந்து 5 வது பிரதிவாதி விஸ்வநாதன் சுவாதீனத்தில் இருந்து அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

15. பி.சா.,ஆ.3 06.05.2010 ஆவணம் எழுதி வைத்த தேதியிலிருந்து அமுலுக்கு வந்து விட்டதாலும், 5 வது பிரதிவாதி விஸ்வநாதன் தான் அந்த சொத்தின் முழு உரிமையாளர் என்பதாலும் தாவா "எ" அட்டவணை சொத்து குறித்து நான் எந்த பாகமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

16.எனது தந்தையார் முதலில் கே,ஜி.எப் சுரங்கத்தில் 20 வருடங்கள் பணிபுரிந்தார். எனது தந்தையார் கே,ஜி.எப் சுரங்கத்தில் 3 வருடங்கள் தான் பணி புரிந்தார் என்றாலும் வழக்கிற்காக 20 வருடங்கள் பணியாற்றினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது தந்தை 20 வருடங்களாக கே.ஜி.எப் பில் பணி புரிந்தார் என்பதற்காக ஆதாரமதாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எனது தாய் லட்சுமி அம்மாள் மதிய உணவு திட்டத்தில் ஆதிதிராவிடர் தொடக்க பள்ளில் சமையல் செய்யும் பணி செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை தான் பணியாற்றிவந்தார்.

17.எனது தந்தை மதிய உணவு திட்டத்தில் ஆதிதிராவிடர் தொடக்க திட்டத்தில் பணிபுரிந்தார் என்று சொல்வது பொய் என்றாலும், பெண்களை தான் சமையலுக்கு பணியமத்துவார்கள் என்றாலும், ஆண்களை பணியமர்த்தமாட்டார்கள் என்றால் சரியல்ல. எனது தந்தை தான் கான்டிராக்டர் எடுத்து ஆட்களை வைத்து வேலை செய்து வந்தார். எனது லட்தை லட்சுமி அம்மாளின் சொந்த ஊர் பக்கத்து ஊரானா பெரும்பாடி கிராமம் அவரது சகோதரர் மலேசியா பீனங்கு கில் பணிபுரிந்தார் என்றால் சரிதான்.

18.எனது தாயாருக்கு அவரது தாயார் வீட்டில் எவ்வளவு நகைகள் போட்டார்கள்

என்ற விவரம் என்க்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தாயார் பசுமாடு வைத்திருந்தார் என்றால் இல்லை. எனது தாயார் லட்சுமி அம்மாள் 1970 ல் கிரையம் பெற்றார் தேதி மற்றும் மாதம் எனக்கு தெரியாது. கிரைய தொகை ஒரு பத்திரத்தில் 3 ஆயிரம் மற்றொன்றில் 17,500 ஆகும்.

19. அந்த கிரையம் பற்றி எனக்கு நேரடியாக தெரியும். பி.சா.ஆ.1 ஆவணத்தில் 3000 ரூபாய் நான் வீடு கட்டுவதற்காக உம்மிடம் ரொக்கமாக பெற்றுக் கொண்ட படியால் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ல் 2 வது பக்கத்தில் ஏற்கனவே நிலம் வாங்குவதற்காக உம்மிடம் ரொக்ககமாக வாங்கிக் கொண்ட ரூபாய் 10,500 போக மீதி ரூபாய் 7,000 ஐ பதிவாளர் முன்னிலையில் உம்மிடம் ரொக்கமாக பெற்றுக் கொண்டேன் என்று உள்ளது என்றால் சரிதான்.

20.பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.,ஆ.2 ஆவணங்களில் எனது தகப்பனார் பெரிய தம்பி பணம் கொடுத்ததாக காணப்படவில்லை என்றால் சரிதான். தாவா "எ" அட்டவணை சொத்து அவருக்கு திருமணத்தின் போது போடப்பட்ட நகைகளை வைத்தும், பசுமாடுகளை வைத்தும் தான் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. தாவா "எ" அட்டவணை சொத்துக்கள் லட்சுமி அம்மாளின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றாலும் தான செட்டில்மென்ட் பத்திரத்தின் படி அவரின் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. எனது தந்தை தான் விவசாயம் செய்து வந்தார். வழக்கிற்காக தாவா "ஏ" அட்டவணை சொத்து எனது தந்தை பணம் கொடுத்து எனது தாயார் பெயரில் வாங்கபட்ட து என்டறு சொல்வது பொய் என்றால் சரியல்ல.

21.தாவா "எ" அட்டவணை சொத்து லட்டசுமி அம்மாளுக்கு சொந்தமான சொத்து என்பதால் அவர் 5 வது பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுப்பதற்கு அனைத்தும் உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல. லட்சுமி அம்மாள் சுய நினைவுடன் இல்லாமல் இருந்தார் என்பதற்கான எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. லட்சுமி அம்மாள் சுய நினைவிடன் இல்லை என்பதை எனது முதல் விசாணை வாக்கு மூலத்திலோ, தாவாவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எனது தாவாவில் குறிப்பிட்டுள்ளேன்.

22.எனது தாயார் தான செட்டில்மெனட் எழுதி வைத்த பிறகு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார் என்பது பற்றி யார் சொன்னர் என்றால் அது பற்றி தெரியாது. 06.05.2010 ல் செட்டில் மென்ட் ஆவணம் எழுதப்பட்டது. எனது தாயார் இறந்த பின்பு நவம்பர் மாதம் 2013 ஆம் ஆண்டு எனக்கு தெரியவந்தது. தான செட்டில்மெனட் எழுதியது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

23.லட்சுமி அம்மாள் நல்ல சுய நினைவோடு நல்ல மன நிலையோடு இருந்த போது 5 வது பிரதிவாதி அவரை கடைசி காலத்தில் பார்த்துக் கொண்டதால் அவரது பெயரில் தான செட்டில்மெனட் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. 5 வது பிரதிவாதி க்கு லட்சுமி அம்மாள் எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் பற்றி எனக்கு தெரியும் என்றாலும் அந்த வழக்கு தொடர்ந்த காரணத்திற்காக தற்போது தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

24.நான் எனது தாயாரை ஒரு பொழுதும் பராமரித்தது இல்லை என்றாலும் அவரை பார்த்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா "பி" மற்றும் "சி" அட்டவணை சொத்துக்கள் பொருத்து பாகம் தர இந்த பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தாவா "எ" அட்டவணை சொத்து பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

2, 3, 6 முதல் 12, 14 பிரதிவாதிகள் 5 வது பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.